**O.S.157 of 2021**

Date : 10.03.2025

பி.சா.1 : தங்கராஜா

<u>பி. சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்சி செய்யப்படுகிறார்</u>

வழக்கு சொத்தின் சர்வே எண்.383 *6 ன் மொத்த விஸ்தீரனம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. 2.34 ஏக்கர் ஆகும். 2.34 ஏக்கர் வாதி சாமுவேல் நாடார் பெயரிலும் பாக்கியமுத்து நாடார் மகன் தேவஇரக்கம் பெயரிலும் உள்ளது என்றால் சரியல்ல. ஐந்து பேர் பெயரில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 பட்டா சாமுவேல் பெயரிலும் தேவ இரக்கம் பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டா மூன்று உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 383/*6A சாமுவேல் நாடார் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. 383/6 என்று மட்டும் தான் உள்ளது. சர்வே எண்.383/6B ஆனது ரோட்டிற்காக அரசாங்கமே கையகப்படுத்தியது என்றால் சரிதான். சர்வே எண்.383/6B ஆனது எங்கள் ஊருக்கு செல்லும் பிரதான ரோடு என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 ஆவணத்தின் படி சர்வே எண்.383/6C வாதி பெயரிலும், தேவஇரக்கம் பெயரிலும் உள்ளது என்றால் உள்ளது. 2019 ல் என் பெயரிலும் டேவிட் பிரபு பெயரிலும் பட்டா ஏற்பட்டிருந்தது. வா.சா.ஆ.1 பட்டாவில் தாசில்தார் சீல் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.383/6C ன் மொத்த விஸ்தீரணம் மொத்தம் 18 ஏர் என்றால் சரிதான். 18 ஏர் நிலமும் புஞ்சை காடுகளாகத்தான் இருந்தது என்றால் சரிதான். மேற்படி புஞ்சை காடுகளுக்கு வா.சா.2 ன் படி தீர்வை ரசீதை வாதி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நான்தான் வீடு கட்டி தீர்வை செலுத்து வருகிறேன். வா.சா.ஆ.2 ல் 6 தீர்வை ரசீதுகள் வாதி செலுத்தியுள்ளார். 2018 ல் இருந்து நான் கட்டி வருகிறேன். வாதி 03.04.2018 ம் தேதியில் தீர்வை ரசீது செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்து என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாத்தா 1979 ல் வாங்கினார். 1979 ல் எங்கள் தாத்தா எழுதி வாங்கினார் என்று நான் சொல்வதில் அது யாரிடம் இருந்து வாங்கினார் யாருக்கு பாத்தியம் என்ற விவரங்களை நான் பார்த்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரங்கள் குறித்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தாத்தாவிற்கு கிரையம் கொடுத்த

நபர்களுக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்பது குறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தாத்தாவிற்கு கிரையம் கொடுத்த நபருக்கு எவ்வாறு பாத்தியம் என்பது அந்த பத்திரத்தில் இல்லை என்றால் சரியல்ல. வேறு நபரிடம் இருந்து வாங்கி அனுபவத்தில் இருந்து எங்கள் தாத்தாவிற்கு கொடுத்துள்ளனர். பி.சா.ஆ.1 ஆவணத்தில் 2 ஏக்கர் 34 செண்டில் 25 செண்டு தான் என் தாத்தா கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்கண்ட 25 செண்டானது 2 ஏக்கர் 34 செண்டில் எந்த பகுதி என்று பத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. எல்கை குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்.383/6 ல் உட்பிரிவு செய்யப்பட்டுள்ள விவரத்தில் அந்த சொத்து 383/6C ல் வருகிறது அதைதான் நான் அனுபவம் செய்து வருகிறேன். ஆனால் பி.சா.ஆ.1 ல் உட்பிரிவு எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.383/6 ஆனது ABC என்று உட்பிரிவு செய்யப்பட்ட பின்புதான் எல்கை விவரங்கள் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.சா.ஆ-1 ல் கண்ட உட்பிரிவுகளும், எல்கை விவரங்களும் தவறானது என்றால் சரியல்ல. மேற்படி உட்பிரிவுகள் எப்போது பிரிக்கப்பட்டது எனக்கு தெரியாது என்றால் 1998 ல் பிரிக்கப்பட்டது என்று நினைக்கிறேன் சரியாக தெரியவில்லை. சொத்தின் அனுபவங்கள் என் தாத்தாவிற்கோ எனக்கோ, என் தகப்பனாருக்கோ எந்த ஒரு காலத்திலும் ஏற்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. அந்த பத்திரத்தின் அடிப்படையில்தான் 2013 ம் வருடம் மூன்று பத்திரங்கள் மோசடியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. சொத்துக்களை அபகரிப்பதற்காக என் தகப்பனரால் உருவாக்கப்பட்ட ஆவணங்கள்தான் பி.சா.ஆ.2 முதல் பி.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் என்றால் சரியல்ல. சொத்தின் உரிமை எங்களுக்கு இல்லாததால்தான் மீண்டும் சீர்திருத்தப்பத்திரம் அதே மூன்று பேருக்கும் போடப்பட்டது என்றால் சரியல்ல. நத்தம் புஞ்சை என்று விவரம் தெரியாததால் போட்டோம். பி.சா.ஆ.5 முதல் பி.சா.ஆ-7 வரையிலான ஆவணங்கள் மோசடியாக ஏற்படுத்தப்பட்டதால் அது வாதியின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்கள் சம்மந்தமாக பட்டா பெயர் மாற்றம் செய்வதற்காக நான்குநேரி தாசில்தாரிடம் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். என் பெயருக்கும் என் தம்பி இரண்டு பேர் பெயருக்கும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பட்டாவில் கண்ட தேவஇரக்கம் என்பவரின் வாரிசுகள் எத்தனை நபர்கள் என்றால் 8 மகன்கள் மற்றும் 2 பெண்கள் ஆவார். மேற்படி தேவ இரக்கம் வாரிசுகள் பட்டா எண்.1241 ல் சர்வே எண் 383/6C அவர்கள் தகப்பனாருக்கு

பாத்தியம் இல்லை என்று எழுதிகொடுத்தனர் என்றால் சரியல்ல. தேவஇரக்கம் நாடாருக்கும், அவரது வாரிசுகளுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது சகோதரர் டேவிட் என்பவரின் மனைவி அன்ன மரியாள் என்பவர் வருவாய் துறையில் வேலை செய்து வருகிறார் என்றாலும் அவரின் தூண்டுதலின் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் பெயர் கூட்டு பட்டாவில் சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவுதான் வா.சா-ஆ.4 என்றால் சரிதான். அந்த உத்தரவிற்கு மேல் வாதி தரப்பில் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டில் அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். இன்று வரையிலும் அந்த ரத்து உத்தரவு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. கூட்டுப்பட்டாவை வைத்துதான் சொத்துக்களில் உரிமை இருப்பதாக சொல்லிவருகிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.13 முதல் பி.சா.ஆ-19 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் வழக்கு நிலுவையில் இருக்கும் சமயத்தில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய பெயரில் என்னுடைய ஊரில் வேறு சொந்த வீடு உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு போட்டுள்ள இடத்தில் வீடு உள்ளது. மின்கட்டண ரசீது, வீட்டு தீர்வை இரசீது வேறு வீட்டிற்குரியது என்றால் சரியல்ல. பி.சா.19 புகைப்படங்களில் உள்ள காலியிடங்களாக உள்ளது என்றால் சரியல்ல. பி.சா.ஆ-19 ற்கும் தபசில் சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சொத்தில் உண்மை தன்மை இல்லாததால்தான் ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.20 பி.சா.ஆ.21, பி.சா.ஆ.22 ஆவணங்களை மோசடியாக உற்பத்தி செய்து எங்களுக்கு கொடுத்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருந்த போதே வழக்கு சொத்தை வைத்து நான் கடன் வாங்கியுள்ளேன் என்றால் என் சொத்தை பொறுத்து கடன் வாங்கியுள்ளேன். வழக்கு நிலுவையில் இருக்கும் போது வழக்கு சொத்தை பொறுத்து உரிமை மாற்றம் செய்யக்கூடாது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் வழக்கு முன்பாகவே லோன் வாங்கிவிட்டேன். நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் நீதிமன்றத்தில் வழக்கிற்காக போலியாக உற்பத்தி செய்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை தவிர 383/6A வேறு நபர்களுக்கு வாதி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.383/6C வாதி பெயரில் பட்டா இருப்பது எனக்கு எப்போது தெரியும் என்றால் 2018 ல் வீடு கட்டும்

போது தெரியும். மேற்படி பட்டா அவர் பெயருக்கு எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. தவறாக ஏற்பட்டுள்ளது. தவறாக ஏற்பட்டுள்ளது என்பதற்கு நான் சட்டநடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எடுத்துள்ளேன். கூட்டுப்பட்டாவில் பெயரை சேர்க்க அந்த சட்டநடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் சரிதான். கூட்டுப்பட்டாவில் பெயர் நீக்கம் செய்யப்பட்டபின்பு ஆவணங்கள் உற்பத்தி செய்தது தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 2018 ல் காலி இடமாக இருந்தது. வேலி போட்டு வைத்திருந்தோம். அனுபவத்தில் இருக்கிறது என்று சொல்வதற்காகத்தான் மோசடியாக ஆவணத்தை உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி என் மீது மூன்றடைப்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நாங்கள் சகோதரர்கள் மூன்று பேர் ஆஜர் ஆனோம் என்றால் சரிதான். வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என்று காவல் துறையினர் அறிவுறுத்தினார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து வாதியின் பெயரில் இன்று வரையிலும் இருப்பதாலும் அதை நான் இடைஞ்சல் செய்ததாலும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.